பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 05 வியாழக்கிழமை 17.02.2022 கதிர் 104

**இனி இது ரகசியம் அல்ல!**

சில வேலைகளை முன்னெடுப்பதற்கு வேளை பார்க்க வேண்டும். சமய சந்தர்ப்பம் பொருந்தி வந்தால் சாதாரண முயற்சியே பெரு வெற்றியான பெறுபேறைத் தந்து விடும். குருவி இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக விவகாரம் முன்னேறும். 2

# இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்பு; டொலரின் பெறுமதி 300 ரூபா வரை உயரக்கூடும்

## ரணில் பகிரங்க எச்சரிக்கை



இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. டொலர் பற்றாக்குறை இன்னும் நீங்கவில்லை. ரூபாவின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. டொலர் ஒன்று 250 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இத்தொகை 275 ரூபாவரை உயரக்கூடும். அத்தோடு நிறுத்தவில்லையென்றால் வருட இறுதிக்குள் 300 ரூபாவரை டொலரின் பெறுமதி அதிகரிக்கக்கூடும்.


– இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தார்.

அவரின் இந்த அறிவிப்பு காணொலியூடாக ஊடகங்களில் நேற்று வெளியானது.

# தமிழ்க் கட்சிகள் கருத்தரங்கை புறக்கணித்தது தமிழரசுக் கட்சி

## மாவை உள்ளிட்ட எவரும் பங்கேற்கவில்லை



(இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியக் கட்சிகளின் 'ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலவரங்களும்' எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. 9



## சு.கவின் மாநாட்டில் பங்கேற்க யாழ். வருகின்றார் மைத்திரி!



(இ.கலையமுதன்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் 2

## இனி நாடாளுமன்றில் பேசுவதால் விளையும் நன்மை மிகக் குறைவே!

### பட்டறிவாகக் கூறுகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம்,பெப்.17

"நாங்கள் எங்கள் மக்களுக்கு உணர்வூட்டுவதிலும் பார்க்க அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். எமது அரசியல் போராட்டங்களுக்கு மக்களின் நேரடி நடவடிக்கைகளே வலுச் சேர்க்கக்கூடும். இனி வருங்காலத்தில் நாடாளுமன்றத்தில் பேசுவதால் விளையும் நன்மை மிகக் குறைவே. ஆனால் மக்களுக்குப் பிழையான அரசியல் அறிவைப் புகட்டக்கூடாது. ஆகவே, நாடாளுமன்றம் தமிழீழத் தமிழர்களுக்கு 9

## ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் நினைவாக முத்திரை நேற்று வெளியீடு



தமிழ்ப் பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகத்தின் நூறாவது ஆண்டை ஒட்டி அவர் நினைவாக முத்திரை மற்றும் விசேட ஞாபகார்த்த உறை வெளியீடு நேற்று மாலை கொழும்பு – 13, புதுச் செட்டித் தெருவில் உள்ள சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தில் 9



## நிலாவெளி கடலில் குளிக்கச் சென்று காணாமல்போன மூவரில் இருவர் மீட்பு

### ஒருவரைத் தேடும் பணி தொடர்கின்றது

திருகோணமலை, நிலாவெளிக் கடலில் குளிக்கச் சென்று 3 பேர் காணாமல் போயிருந்த நிலையில் இருவர் மீட்கப்பட்டுள்ளமையுடன் மேலும் ஒருவரைத் தேடும் பணி தொடர் கின்றது.

தனியார் 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக யாழ்.நகரில் போராட்டம்!



பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை 2

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற நோக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பித்த இப்போதைய முயற்சியும் கூட சுபநேரம் பார்த்துத்தான் தொடங்கியிருப்பார்கள் போலும். அந்த முயற்சி பலரும் எதிர்பாராத – ஆச்சரியமான – அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பது விநோதம்தான்.

மூன்று, நான்கு நாள் முன்னறிவித்தலுடன் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் அந்த முயற்சி எடுக்கப்பட்ட போதே எதிர்பாராத ஆதரவு அதற்குக் கிட்டியது.

அந்தக் கையெழுத்துப் போராட்டத்தை தெற்கின் குக்கிராமங்களுக்கும் எடுத்துச் செல்லும் விருப்பை தென்னிலங்கைச் சிங்களத் தரப்புகள் பலவும் தாமே முன்வந்து பிரேரித்து செயற்படுத்தத் தொடங்கியிருப்பது நல்ல அம்சம்.

அது மாத்திரமல்ல, அந்தப் போராட்டம் தொடங்கிய வேளையோ என்னவோ, மேற்படி பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும், 'பயங்கரவாதம்' என்று அடையாளப்படுத்தப்படும் அம்சங்கள் கூட சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழான விசேட ஏற்பாடுகள் மூலம் கையாளப்பட வேண்டும் என்றும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு பகிரங்கமாகக் கோரியிருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றதும், அவசர அவசரமாக அரசமைப்புக்கு இருபதாவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட பல ஆணைக் குழுக்களுக்கும் சுயாதீனமான முறையில் – சுதந்திரமான வகையில் – ஆணையாளர்களை நியமிக்கும் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழித்தார். இந்த ஆணைக்குழுக்களுக்கு உரியவர்களை நியமிக்கும் மேலதிகாரம் ஜனாதிபதியான தமது கைகளுக்கு முழுமையாகக் கிட்டும் வகையில் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை ஏற்படுத்தினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு போன்றவற்றுக்கு 19ஆவது திருத்தத்தின் கீழ் சுயாதீனமாக நியமிக்கப்பட்ட ஆணையாளர்களின் பதவிக் காலம் முடிவடைந்தமையால் – அல்லது இருந்தவர்களை ஏதோ அழுத்தம் கொடுத்து விலகப் பண்ணி விட்டு – இந்த ஆணைக்குழுக்களுக்கு எல்லாம் தனது கையாள்களை நியமித்தார் ஜனாதிபதி.

இப்படி நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவே இப்போது அவருக்கு 'ஸேம் சைட் கோல்' அடிப்பதாக எனக்குப் படுகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சார்பில் அதன் தலைவரான நீதியரசர் ஹோஹிணி மாரசிங்க அம்மையார் அறிவித்திருக்கின்றார்.

அது மாத்திரமல்ல, தற்போதைய அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கவுன்ஸில் முறைமை மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்படும் முறைமையே தவறானது, அந்த நியமன முறையில் வெளிப்படைத் தன்மையே இல்லை, ஆகையால் இந்த ஆணைக்குழுவுக்கு ஆள்களை நியமிக்கும் நியமன முறைமையை மாற்றியமைக்கும் அரசமைப்புத் திருத்தம் அவசரமாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

அதாவது, தங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தலைவராகவும், ஆணையாளராகவும் நியமித்த முறைமை – அரசரமைப்பின் 20ஆவது திருத்தத்தின் கீழான ஏற்பாடு – தவறானது என அந்த ஆணைக்குழுவே 'ஸேம் சைட் கோல்' அடித்திருக்கின்றது.

இனி மீண்டும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றிய விவகாரத்துக்கு வருவோம்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூடுகின்ற வேளை பார்த்து இந்தக் கையயெழுத்துப் போராட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுத்திருப்பதுதான் அந்த சமய சந்தர்ப்பம்.

நேற்று இந்த விடயத்தை ஒட்டி ராஜபக்ஷ அதிகார பீடத்தில் ஜுனியரான அமைச்சர் நாமல் ராஜபக்ஷ செய்தி ஒன்றை 'ட்வீட்' செய்திருக்கின்றார்.

"1979 இலிருந்து நீண்ட காலம் தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீடித்து விட்டது. தற்போதைய காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அது மறுசீரமைக்கப்பட வேண்டியது அவசியமே. இப்போது அதைத் திருத்துவதற்கு அரசு அறிமுகப்படுத்தியுள்ள சட்டமூலம் இதில் முதல் அடிதான். எந்தப் பெரிய பயணமும் முதல் அடியிலிருந்துதான் தொடங்குகின்றது.'' – என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அந்தச் செய்தியில் கூறியிருக்கின்றார்.

மனித உரிமைகள் விடயத்தில் அரசுக்கு இப்போது பெரும் தலைவலியாக மாறியிருப்பவர் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

கொழும்பில் மேற்படி கையெழுத்துப் போராட்டத்தை விரிவுபடுத்திய தமிழரசு எம்.பிக்கள் சுமந்திரனும், சாணக்கியனும், கர்தினால் மல்கம் ரஞ்சித்தையும் அதற்கு ஆதரவான மகஜரில் ஒப்பமிட வைத்தமையும் இவ்விவகாரத்தில் ஆட்சித் தரப்பினரிடையே சலசலப்பை ஏற்படுத்தக் காரணமாகியிருக்கலாம்.

இன்றைய நிலையில், இந்தக் கையெழுத்து சேகரிப்புப் போராட்டம் இன்னும் இரண்டு வாரங்கள் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவில் ஆரம்பமான இந்தப் போராட்டம் தெற்கின் ஏதோ ஒரு கடலோர மூலையில் நிறைவடைவதுதான் பொருத்தமாக இருக்கும்.

அந்த நிறைவு நிகழ்வில் தென்னிலங்கையின் வலுவான அரசியல் சக்திகளையும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகக் களத்திற்குக் கொண்டு வந்தால் விடயம் இன்னும் அழுத்தம் பெறும். தமிழர் தரப்புகளும் வேறுபாடு காட்டாமல் அதில் இணைந்து கொள்வது சிறப்பு.

அரசுத் தரப்பில் இருக்கும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), அமைச்சர் வியாழேந்திரன், தீலீபன் மற்றும் கருணா போன்றோரும் கூட மனசார இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீடிக்கப்படுகின்றமையை ஏற்கார் என்பது பெரும்பாலும் சரியாகவே இருக்கும்.

போராட்டத்தின் இறுதி நிகழ்வில் இவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளவும் கூட முயலலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாட்டுக்காக அடுத்த சில தினங்களில் யாழ். வரும் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவிடம் கூட இந்த மகஜரில் – பயங்கவரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிக்க்க கோரும் மனுவில் – கையெழுத்து வையுங்கள் என்று நீட்டினாலும் கூடத் தவறில்லை.

எல்லாம் என் யோசனைகள்தாம். உள்வாங்குவதும் நிராகரித்துப் புறம் ஒதுக்குவதும் ஏற்பாட்டாளர்களின் சுதந்திரம்.

– மின்னல் –

## நிலாவெளி கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்கள் சிலர் சுற்றுலா மேற்கொண்டு நிலாவெளி கடற்கரைக்குச் சென்றிருந்த நிலையில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கடலில் குளித்துக்கொண்டிருக்கும்போது பாரிய அலை அவர்களை அடித்துச் சென்றதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டது எனக் காணாமல்போனவர்களின் நண்பர்கள் தெரிவித்தனர்

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சுற்றுலா சென்றவர்களில் 13 பேர் கடலில் நீராடச் சென்றனர். அவர்களில் நுவரெலியா – தலவாக்கலையைச் சேர்ந்த செல்வன் சமல் (வயது 21), தேஹிகொட்டுவ, நாளந்த பிரதேசத்தைச் சேர்ந்த பிரியங்கர பண்டார (வயது 28) மற்றும் பட்டியமுல்ல – தம்பகஹவெல, தலாத்து ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த (வயது 21) மூவருமே காணாமல்போயுள்ளனர்.

இந்நிலையில், உப்புவெளி பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினரால் இருவர் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், பட்டியமுல்ல, தம்பகஹவெல, சதலாத்துஓயா பிரதேசத்தைச் சேர்ந்த (வயது 21) நபர் மீட்கப்படாத நிலையில் குறித்த நபரைத் தேடும் பணியில் உப்புவெளிப் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் மற்றும் இலங்கை கடற்படையினர் இணைந்து நேற்றிரவு வரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேனாதிராஜா கையெழுத்திட்டுப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இ.ஆனோல்ட், கே.சயந்தன், எஸ்.சுகிர்தன் உள்ளிட்ட வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளின் தவைர்கள், உறுப்பினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

## சு.கவின் மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன யாழ். மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டுக்கான அழைப்பிதழை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இதன்போது, யாழ். மாவட்ட மக்கள் கடந்த காலத்தில் தமக்கு வழங்கிய ஆதரவை நினைவுகூர்ந்த மைத்திரிபால சிறிசேன, யாழ். மாவட்ட மக்களைச் சந்திப்பதற்கு ஆர்வமாக இருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# தனி அரசுக்கான போராட்டத்தையே விடுதலைப் புலிகள் முன்னெடுத்தனர்

## கஜேந்திரன் எம்.பி. ஊடக அறிக்கை



தமிழீழ விடுதலைப் புலிகள் தனியரசுக்கான போராட்டத்தையே முன்னெடுத்தார்கள் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற விவாதத்தில் என்னுடன் பங்குகொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த சுரேஷ் பிறேமச்சந்திரன் விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக்காகப் போராடி அவர்கள் எதனையும் சாதித்திருக்கவில்லை என்றும், தமிழர்கள் தேர்தல்களில் ஆணை வழங்கிய, தமிழ் மக்களது இருப்பிற்கு குறைந்தபட்ச பாதுகாப்பையாவது வழங்கக்கூடிய தேசம் அங்கீகரிக்கப்பட்ட, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நாம் வலியுறுத்தும் சமஷ்டிக்கும் வழிவரைபடம் இல்லை என்றும் கூறி மக்கள் மனதில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி, இருப்பதையாவது தக்க வைக்க வேண்டும் என்ற போர்வையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆறுகட்சிகள் கூட்டாக கோரும் துரோக நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கு முயன்றிருந்தார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சு மேசையில், ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமானதும் சாத்தியமானதுமான தீர்வை பரிசீலிப்பதற்குத் தயாராகவே இருந்தார்கள் என்ற உண்மையை பதிவு செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு ஏற்பட்டது.

அந்த வகையில், விடுதலைப் புலிகள் தமிழீழத்துக்காகப் போராடி வந்த நிலையில் அரசுடன் நேரடியாக இடம்பெற்ற பேச்சுக்களிலும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின் போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத்தரப்பு முன்வைத்தால் பரிசீலிக்கத் தாயராக இருந்தார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்த முற்பட்ட வேளையில், நான் கூறிய கருத்துக்களானவை, விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்காகப் போராடவில்லை என தவறாக அர்த்தப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. தெளிவற்ற வகையில் அந்தக் கருத்து வெளிவந்தமைக்காக நான் மனம் வருந்துகின்றேன். அதன் காரணமாக மனவேதனைக்கும், மனவுளைச்சலுக்கும் உள்ளான தமிழ்த் தேசிய பற்றாளர்களிடம் நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் முன்வைத்த உரிமைக் கோரிக்கைகளை சிறீலங்கா அரசு நிராகரித்தமை மட்டுமன்றி தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையைத் தீவிரப்படுத்தியதன் விளைவாகத் தமிழீழ தனியரசை உருவாக்கும் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதிவரை உறுதியாக முன்னெடுத்து வந்தார்கள்.

விடுதலைப் புலிகள் தமிழீழத்துக்காகப் போராடி வந்த நிலையில் அரசுடன் நேரடியாக இடம்பெற்ற பேச்சுக்களிலும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின்போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத்தரப்பு முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்பதை வெளிப்படுத்தி இதயசுத்தியுடன் செயற்பட்டு வந்தார்கள்.

அதன் ஒரு கட்டமாகவே இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவு முன்வைக்கப்பட்டது. அவ்வாறு விடுதலைப் புலிகள் தயாராக இருந்தபோதும் சிறீலங்கா அரசு எந்தவொரு தீர்வையும் வழங்கத் தயாரில்லாத நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரிவினையைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்ற விசமத்தனமான பிரசாரத்தை சர்வதேச அளவில் அரசு முன்னெடுத்தது.

அவ்வாறு அரசு பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்தபோது, அரசின் சதிகளையும், சூழ்ச்சிகளையும் மூடிமறைத்து, அனைத்துப் பழியையும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசு சுமத்துவதற்கு இன்று 13 ஆம் திருத்தத்தை கூட்டாக வலியுறுத்தும் தரப்பிலுள்ளவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

அதனை வாய்ப்பாக பயன்படுத்தி தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறைச் சாத்தியமான தீர்வைக் காண்பதற்கு விடுதலைப் புலிகள் இடையூறாக உள்ளார்கள் என்று கூறி ஶ்ரீலங்கா அரசு எமது மக்கள் மீது இனவழிப்பு யுத்தத்தை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் பூரண ஆதரவு வழங்கியது.

அதன் விளைவு எமது மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், எமது உரிமைக்கான நீதிக்கான விடுதலைப் புலிகளது ஆயுதப் போராட்டமும் மௌனிக்கப்படவே வழிவகுத்தது. போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் இன்று வரை, அரசு தமிழ் மக்களுக்கு எதனையும் தருவதற்குத் தயாரில்லாத போதும், இந்தத் தரப்பினர் புலிகள் தனிநாட்டைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லாமையாலேயே அழிக்கப்பட்டார்கள் என்றும் இருப்பதையும் தவறவிடக்கூடாதென்றும் கூறி மக்களை தோல்வி மனப்பான்மைக்குள் தள்ளும் நடவடிக்கையில் கடந்த 13 ஆண்டுகளாக ஈடுபட்டு வந்திருந்தார்கள்.

தற்போது, ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் மிகப் பலமாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தாலேயே எதனையும் அடைய முடியவில்லை என்றும், முடிந்தவரை அவர்கள் போராடி விட்டார்கள் என்றும் கூறி முதலைக் கண்ணீர்விட்டவாறு இருப்பதையும் விட்டுவிட்டு என்ன செய்வது அதனால் 13 ஆம் திருத்தத்தையாவது இறுக்கிப் பிடித்திருக்க வேண்டுமென்று கூறி மக்களை ஏமாற்றி தமிழ் அரசியலை 13 இற்குள் முடக்கி தமிழர்களது உரிமைப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க சதி செய்கின்றார்கள் என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(100)




# வவுனியாவில் கடும் மழையினால் உழுந்து செய்கையாளர்கள் பாதிப்பு





வவுனியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கடும்மழை காரணமாக உழுந்து செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இலங்கையில் அதிக உழுந்து உற்பத்தி மாவட்டங்களில் ஒன்றாகிய வவுனியா மாவட்டத்தில் உழுந்து அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் பலர் உழுந்து அறுவடையை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விதைத்து 3 மாதமாக காத்திருந்து, அறுவடைக்குத் தயாரான உழுந்து பயிர்கள் மழை காரணமாகப் பாதிப்படைந்து வருகின்றது. இதனால் பலரும் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (100)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்ச்சைக்குரிய சட்டமா அதிபர்

**இலங்கையில் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் முக்கியமான கருத்துரை ஒன்றை கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் பகிரங்கமாக முன்வைத்திருக்கின்றார்.**

**ஜனநாயக நாட்டில் செழுமையான ஆட்சிக்கு முக்கியமான தூண்கள் மூன்று.**

**முதலாவது – நிறைவேற்றதிகாரம். அது இலங்கையில் ஜனாதிபதியிடம்; அடுத்தது – சட்டமியற்றும் துறை. அது நாடாளுமன்றத்திடம்; மூன்றாவது –நீதித்துறை. இலங்கையில் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதில் பங்களிக்கின்றன.**

**இந்த மூன்று துறைகளும் ஒன்றில் ஒன்று தங்கியிராமலும், தனித்துவமாகவும், சுதந்திரமாகவும், கட்டுப்பாடின்றியும் இயங்க வேண்டும்.**

**மூன்றும் தனித்துவமாகவும், நேரிய வழியிலும் செயற்படுவதை உறுதி செய்யும் காவல் நாயாக – நான்காவது துறையாக – ஊடகத்துறை மிளிர வேண்டும்.**

**நீதித்துறையின் செயற்பாட்டில் முக்கிய பங்களிப்பு சட்டமா அதிபருக்கு உரியது. நீதித்துறையின் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் பேணிப்பாதுகாப்பதில் அவரின் பங்களிப்பே பிரதானமானது. நிறைவேற்றதிகாரத்துக்கும், சட்டமியற்றும் நாடாளுமன்றத்துக்கும் சட்ட வழிகாட்டியாகவும் அதே நேரம் இந்த இரண்டு துறைகளுக்கும் நீதித்துறைக்கும் இடையில் இணைப்புப் பாலமாகவும் செயற்பட வேண்டிய அவர், இந்தப் பணியில் பக்கம் சாராதவராகவும், நீதியின் பரிபாலனத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நியாயமாக நிலை நிறுத்துவதில் சுயாதீனப் பண்பியல்பைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும்.**

**இந்த விடயத்தில்தான் சந்தேகத்தை வெளிப்படுத்தும் வகையில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.**

**தற்போதைய சட்டமா அதிபரின் செயற்போக்கை அவர் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் கருத்துரைத்திருக்கின்றார்.**

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் தனது பொறுப்பை விடுத்து, அந்த விவகாரத்தில் குற்றமிழைத்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துவோர் மீது வழக்குத் தொடுக்க வழிப்படுத்துகின்றார் சட்டமா அதிபர் என்று குற்றம் சுமத்துகின்றார் பேராயர்.**

**“சட்டமா அதிபர் பொது மக்களின் சேவகர். நாட்டுக்கும் மக்களுக்கும் சமூகத்துக்கும் நீதியானவற்றைச் செய்வதுதான் அவர் பணியே தவிர அரசியல்வாதிகளின் விருப்பு, வெறுப்புகளை நிறைவேற்றுவதல்ல” – என்றும் பேராயர் சுட்டிக் காட்டுகின்றார்.**

**ஆட்சியாளர்கள் எதேச்சாதிகாரப் போக்கில் நகரும் இச் சமயத்தில், இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் தமக்கு கிடைத்த அளப்பரிய அதிகாரங்களை வைத்துக் கொண்டு நிறைவேற்றதிகார ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது விருப்புக்குரியவராக இப்பதவிக்குத் தேர்ந்தெடுத்த சட்டமா அதிபரே இப்போது பதவியில் இருக்கின்றார்.**

**தாம் சுயாதீனமாக – சுதந்திரமாக – செயற்படுகின்றமை மட்டுமல்லாமல், தாம் அப்படிச் செயற்படுகின்றார் என்று மக்கள் நம்பக் கூடிய வித்திலும் நடந்து கொள்ள வேண்டியது சட்டமா அதிபரினதும் கடமையாகின்றது.**

**சரியோ, பிழையோ அவரும் ஒரு தமிழர். இதற்கு முன்னர் இதே பதவியை வகித்த தமிழர் ஜனாதிபதி சட்டத்தரணி கமலசபேசன் திருகோணமலை மண்ணில் இருந்து வந்தவர். இப்போதைய சட்டமா அதிபர் சஞ்சேய் இராஜரட்ணமும் அதே மண்ணைச் சேர்ந்தவர்தான்.**

**சட்டமா அதிபர் என்ற பொறுப்பில் கமலசபேசன் நிலை நிறுத்திய கீர்த்தி, தனித்துவம், சிறப்பு, பெருமை போன்றவற்றைத் தனக்குரிய வழிகாட்டல்களாக இவர் கொள்வாராயின் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டவராக வரமுடியும். அரசியல் தலைமைகளின் ஏவல்களில் இருந்து அவர் விடுபட்டால் மட்டுமே அதற்கு சாத்தியம் உண்டு.**

# நல்லாட்சியில் ஜனநாயகம் மீள உயிர்ப்பிக்கப்பட்டது

## மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் கருத்து

19 ஆவது அரசமைப்பு அரசியல் சரத்து கொண்டுவரப்பட்டு நாட்டின் ஜனநாயகம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் கட்சி ஆதரவாளர்களுடனான ஒன்றுகூடலின்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

எம்மால் உயிர்பிக்கப்பட்ட ஜனநாயகத்தை தற்போதுள்ள அரசு மரணிக்கச் செய்துள்ளது. ஆணைக்குழுக்கள் அனைத்தும் சுதந்திரமற்ற நிலையில் காணப்படுகின்றன. எனவே ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்கு கடந்த நல்லாட்சியில் தான் அடித்தளமிடப்பட்டது.

தற்போது 20 ஆவது சரத்தைக் கொண்டு வந்து அவையனைத்தும் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன. தற்போது அரசாங்கம் பசளையை நிறுத்தி விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளது.

இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள். இலவசமாக பசளை வழங்குவோம் எனத் தேர்தல் காலத்தில் கூறிய அரசு தற்போது பணம் கொடுத்துக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் எந்தப் பொருள்களைக் கொள்வனவுசெய்வதற்குச்சென்றாலும்வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. வரிசை யுகம் ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளார்கள்.

இன விரிசல்கள் எற்படுத்தப்பட்டுள்ளன. எமது கட்சி இன ஒற்றுமைக்கு வழிவகுந்து செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் மக்கள் சிந்தித்து செயற்படுவதற்குரிய காலம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரம் குட்டிச்சுவராக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை. வெளிநாட்டு வருமானங்கள் குறைந்துள்ளன.

சர்வதேச மட்டத்தில் ஏற்றுமதி பாரிய வீழ்ச்சிடைந்துள்ளது. ஒரு திடமான பொருளாதாரக் கொள்கைஇல்லை. மக்கள்மிகவும்இன்னலுறுகின்றார்கள்.

இந்த நிலையில் அரசாங்கம் வீண் செலவுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்நாட்டின் சரித்திரத்திலே இல்லாத பிரச்சினைகளை தற்போது மக்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இதற்கு ஒரே வழி இந்த அரசை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமராஸ தலைமையில் ஸ்திரமான அரசை நிறுவுவது தான். இதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்தார்.

# ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த பொதிகளில் பெருமளவான போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன

ஐரோப்பிய நாடுகள் இருந்து வந்த பொதிகளில் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன என இலங்கை சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் மேற்கொள்ளப் பட்ட சோதனையின் போது, 90 லட்சம் ரூபாபெறுமதியான போதைப்பொருள் அடங்கிய 5 பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன.

இந்தப் பொதிகள் பிரித்தானியா, ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளிலிருந்து வந்துள்ளன. தனியார் முகவர் நிறுவனங்கள் மூலம் இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் கம்பஹா பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு போலியான முகவரியிட்டு பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குஷ் எனப்படும் கஞ்சா 472 கிராமும் 302 போதை வில்லைகளும் சிக்கியுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்திடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் பொருள்களாக போதைப்பொருளை அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிடமிருந்து அன்டிஜன் கருவிகள் இலங்கையின் நெருக்கடியைப் போக்க உதவி

இந்தியாவிடமிருந்து ஒரு லட்சம் ரபிட் அன்டிஜன் டெஸ்ட் கருவிகளை இலங்கை கடந்த செவ்வாய்க்கிழமை அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்டுள்ளது. உரிய நேரத்தில் இந்தியா வழங்கிய இந்த உதவிக்கு இலங்கை நன்றி தெரிவிப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல டுவிட் செய்துள்ளார்.

’இதுபோன்ற சமயங்களில் எங்கள் நட்பு மிகவும் முக்கியமானவை மற்றும் இந்த அன்பளிப்புக்காக இலங்கையர்கள் சார்பாக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்’ என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் அண்மைக்காலமாக ரபிட் அன்டிஜன் டெஸ்ட் கருவிகளுக்கு கடுமையானபற்றாக்குறைஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் கைச்சாத்து

மஹாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த செவ்வாய்க்கிழமை தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப் படுத்தியுள்ளார் என நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு அறிவித்துள்ளது. இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த 08 ஆம் திகதி மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன் ஊடாக 1981ஆம் ஆண்டு 66 ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் எனப் பெயர் மாற்றம் பெறுவது உள்ளிட்ட திருத்தங்களுக்கு உள்ளாகிறது.

இதற்கமைய சட்டமூலத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியதன் மூலம் 2022 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தச்) சட்டம் கடச்த செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வந்தது.

# கம்பஹா மாவட்டத்துக்கு ஒரு நீதி நுவரெலியா மாவட்டத்துக்கு வேறா?

## அரசின் இனவாதப் போக்குக்கு எதிராகப் போராடுவோம் என்கிறார் ஜோதிலிங்கம்

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்புத் தொடர்பாக அரசின் வர்த்தமானிப் பிரகடனம் நிறைவேற்றப்படாததை எதிர்த்து மலையக அரசியல் அரங்கம் கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக சமூக விஞ்ஞான ஆய்வு மன்றத்தின் தலைவர் சி.அ. ஜோதிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நுவரெலியா மாவட்டத்துக்கான பிரதேச செயலகத்தை வழங்கும் வரை முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு எம்மாலான கையெழுத்துக்களை சேகரித்து வழங்குவதற்கு சமூக விஞ்ஞான மன்றம் முன்னின்று செயற்படும்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்களை உருவாக்குவது தொடர்பான தீர்மானம் 2016 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

2018 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி அரச வர்த்தமானியில் (வர்த்தமானி இலக்கம் 214 – 28) விசேட வர்த்தமானி பிரகடனமாக வெளியிடப்பட்டது.

இந்தப் பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாறாக இரண்டு உப பிரதேச செயலகங்கள் மட்டும் உருவாக்கப்பட்டன.

அதேவேளை குறிப்பிட்ட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது போல காலி மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு காலி மாவட்டத்திற்கு ஒரு நீதியும் நுவரெலியா மாவட்டத்திற்கு இன்னோர் நீதியும் வழங்கப்பட்டுள்ளது.

இதனையே மனோ கணேசன் காலிக்கு வெள்ளி. நுவரெலியாவிற்கு தகரம் என விமர்சனம் செய்துள்ளார்.

அரசின் இந்தப் பாரபட்சமான நடவடிக்கையை சமூக விஞ்ஞான ஆய்வு மையம் வன்மையாக கண்டிப்பதோடு வடக்கு – கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு செயற்படும் சமூக விஞ்ஞான ஆய்வுமையம் நான்கு காரணங்களுக்காக இந்தப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும்.

ஒடுக்கப்படும் சமூகம் எங்கிருந்தாலும் அதற்குக் குரல் கொடுக்க வேண்டியது ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் அமைப்புக்களது கடமையாக உள்ள நிலையில் மலையக மக்கள் தற்போதும் பெரும் தோட்ட சட்டத்துக்குள் கட்டமைக்கப்பட்டுள்ள அடிமைப் பொறிமுறைக்குள் உட்படுட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசின் நிர்வாக முறைமைக்குள் அவர்கள் உள்வாங்கப்படவில்லை. மலையக மக்களின் அரசியல் இருப்பு பலப்பட்டுவிடும் என்பதற்காக பெரும் தேசியவாத சக்திகள் இலாவகமாக இதனைத் தவிர்க்கின்றனர்.

இதற்கு எதிராக குரல் கொடுப்பது ஜனநாயக சக்திகளின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

இரண்டாவது பெரும் தேசியவாத அரசாங்கத்தின் இனவாத முகத்தை அம்பலப்படுத்துவதாகும்.

பெரும்தேசியவாத அரசாங்கம் வடக்கு – கிழக்கு மக்களுக்குக் காட்டிய இனவாத முகத்தை தற்போது மலையக மக்களுக்கும் காட்டத் தொடங்கியுள்ளது.

ஒரே வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட காலி மாவட்டத்துக்கு ஒரு நீதியும் நுவரெலியா மாவட்டத்துக்கு இன்னோர் நீதியும் வழங்கப்படுவது இனவாத செயற்பாடேயொளிய வேறொன்றுமல்ல.

மூன்றாவது மலையக மக்கள் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகப்பெரும் சேமிப்புச் சக்திகளாவர். அதேவேளை மலையக மக்களுக்கும் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் சிறந்த சேமிப்புச் சக்திகளாவர்.

அரசியல் அடையாளங்களிலும் அரசியல் தீர்விலும் வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருக்கின்றபோதும். இரண்டு தேசிய இனங்களும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருப்பது இலங்கைத் தீவின் புவிசார் அரசியல் நிர்ப்பந்தமும், சமூக நிர்ப்பந்தமும் ஆகும்.

நான்காவது தமிழ் அரசியல் வரலாற்றில் இதுவரை கால மரபுத் தொடர்ச்சியை பின்பற்றுவதாகும். இதுவரை காலமும் மலையக மக்களுக்காக குரல் கொடுக்க வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் பின்நின்றதில்லை. அதேபோல வடக்கு – கிழக்கு மக்களுக்காக குரல் கொடுக்க மலையக மக்கள் பின்நின்றதில்லை.

தந்தை செல்வா மலையக மக்களின் பிரஜாவுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டதைக் கண்டித்தே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

அதன் முதலாவது அங்குராப்பணக் கூட்டத்திலேயே மலையக மக்களின் போராட்டங்களுக்குப் பக்கபலமாக நிற்பது எமது கடமை எனக் கூறினார்.

1960 ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் சமர்ப்பித்த நான்கு அம்சக் கோரிக்கையிலும் நான்காவது கோரிக்கையாக மலைய மக்களின் கோரிக்கையையும் முன்வைத்தார்.

தமிழரசுக் கட்சியின் மாநாடுகளில் மலையக மக்களின் அபிலாஷைகளுக்கு முன்னுரிமைகள் வழங்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு திம்பு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட திம்புப் பிரகடனத்திலும் நான்காவது கோரிக்கையாக மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது.

அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பிய கடிதத்திலும் மலையக மக்களின் அபிலாஷைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேபோல மலையக மக்களும் வடக்கு – கிழக்கு மக்களின் போராட்டங்களுக்கு குரல் கொடுக்கத் தவறவில்லை. தொண்டமான் காலத்திலிருந்து அந்த மரபு பின்பற்றப்பட்டது.

தொண்டமான் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை சுபாஸ் சந்திரபோஸின் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தோடு ஒப்பிட்டு முழுமையான ஆதரவை வழங்கினார்.

சந்திரசேகரன் தனது இயலளவுக்கு மேலாக ஒத்துழைப்பு வழங்கியதால் சிறைவாசம் அனுபவித்தார். வடக்கு – கிழக்கில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மலையக வம்சாவழியினர் போராளிகளாகி உயிர் துறந்துள்ளனர்.

இந்த வரலாற்று மரபுத் தொடர்ச்சியைப் பேணுவதும் பாதுகாப்பதும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையாகும். இந்தக் கடமையின் படி மலையக மக்களின் விவகாரங்களை உலகளாவிய வகையில் கொண்டுசெல்வதற்குத் தயாராக வடக்கு– கிழக்குத் தமிழ் மக்கள் உள்ளனர்.

மலையக மக்களின் இந்தக் கையெழுத்துப் போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு தாயக மக்களையும், புலம்பெயர் மக்களையும் தயவாக கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்.மாவட்ட அரச அதிபர் பதவியில் இருக்கும்வரை மக்களுக்கு நியாயமான தீர்வுகள் கிடைக்கமாட்டா!

## ஜனாதிபதியிடம் முறையிடுவேன் என்கிறார் வலி.மேற்கு தவிசாளர் நடனேந்திரன்

தற்போதைய மாவட்ட அரச அதிபர் பதவியில் இருக்கும்வரை எமது பிரதேசத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த யாழ். மாவட்ட மக்களுக்கும் நியாயமான அவிருத்திகளோ அன்றி தீர்வுகளோ கிடைக்கப் போவதில்லை என சுட்டிக்காட்டிய வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன், மாவட்ட அரச அதிபர் அரசியல் வாதி ஒருவரின் நிகழ்ச்சி நிரலுக்கு எடுபடாது தான் ஓர் அரசாங்கத்தின் பொறுப்புமிக்க உயரதிகாரி என்ற நிலைப்பாட்டுடன் மக்களுக்கான சேவையை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்பட முடியாவிடின் முன்னைய அரச அதிபரைப் போன்று பதவியிலிருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது பிரதேசத்தின் பல்வேறு விடயங்கள தொடர்பில் சபையில் விவாதிக்கப்பட்டன. இந்நிலையில் சபையின் உறுப்பினர் ஒருவரால் தற்போது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவால் மக்களின் நலன்களை முன்நிறுத்தியதான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கென தலா 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரங்களுக்காக தலா 40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி திட்டம் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளது.

அத்துடன் இந்தத் திட்டத்தை மக்களுக்கு பாரபட்சமின்றி மக்களின் தெரிவாக



முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த நிகழ்வுக்கு பிரதேச சபை உறுப்பினர்களான தங்களை அழைக்கவில்லை என்றும் அதை நடைமுறைப்படுத்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஊடாக ஒரு பட்டியல் அனுப்பப்பட்டு முன்னெடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியதுடன் எமது அயல் மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்துக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் சம கௌரவம் கொடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் உள்ளது. அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் இவ்வாறு மக்கள் பிரதிநிதிகள் ஓரங்கட்டப்பட்டுள்ளமை எவ்வகையில் நியாயமானது என கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் போதே தவிசாளர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்–

நாட்டில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்றும் நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ இவ்வாறான பல நடைமுறைகளை முன்னெடுத்துவருகின்றார்.

அத்துடன் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் அந்த அரசாங்கம் சரிய ாகவே செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால், யாழ். மாவட்டத்தில் மட்டும் இவ்வாறான புறக்கணிப்புகள் நடைபெற்றுள்ளன.

இதற்கு மாவட்டத்தின் அரச அதிபரே பொறுப்புக் கூறவேண்டும். ஆனால் அவர் ஓர் அரசியல் தரப்பின் பின்னணியில் இருந்து செயற்படுகின்றமையால் அந்த அரசியல் தரப்பினரது முடிவுகளையே மக்களிடம் அரசாங்க அதிகாரிகளுடாகத் திணிக்கப்படுகின்றது.

இதனால் உண்மையாக தீர்க்கப்பட வேண்டிய மக்களின் தேவைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்டு ஒரு சிலரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அவை நடைமுறைப்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது.

அதனால்தான் மேற்படி நிகழ்வுக்கு பிரதேசசபையின் உறுப்பினர்கள் அழைக்கப்படாது புறக்கணிக்கப்பட்டனரே தவிர மாற்றுக்காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. – என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, சபையின் உறுப்பினர்கள் பலர் எமது அயல் மாவட்டமான கிளிநொச்சியில் அனைத்து உறுப்பினர்களும் ஒருங்கிணைப்பு குழு தலைவரின் பணிப்பில் கட்சி பேதமின்றி அழைக்கப்பட்டனர் எனவும் அந்த உறுப்பினர்கள் தமக்குத் தெரிவித்தனர் எனச் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் மேற்படி தரப்பினர் ஒருங்கிணைப்பு குழு அதிகாரத்தை கொண்டு இவ்வாறு பல மக்கள் நலத் திட்டங்களை தமது நலத் திட்டங்களாக செயற்படுத்தும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இவற்றை ஏற்றுக் கொள்ள முடியாதென்று வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் உறுப்பினர்களின் ஆதங்கங்களையும் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்ட தவிசாளர் இவற்றை கட்டப்படுத்தும் அதிகாரி மாவட்ட அரச அதிபருக்கே உரியது என்றும் அவர் அவ்வாறு செயற்படப் போவதில்லை என்ற காரணத்தால் எமது பிரதேசத்தின் மக்களின் அவசிய தேவைப்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் கூறியமையுடன் இவை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை எழுதி அதற்கான தீர்வை கோர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தமையுடன் இந்தச் செயற்பாட்டை அனைத்து உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் கண்டனமாக நிறைவேற்றுகிறேன் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வன்னியின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வவுனியாவில் காணி அமைச்சின் நடமாடும் சேவை

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள் ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தானின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட காணி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்தமையுடன், அவற்றிற்கு விரைவான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதன் அடிப்படையில் ஜனாதிபதி, காணி அமைச்சருக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைபவாக, நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானுடன் கலந்துரையாடிய அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய நடமாடும் சேவை ஒன்றை வவுனியாவில் இம்மாதம் 27 ஆம் திகதி நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு பணித்துள்ளார்.

இதன் போது வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களங்கள் என்பவற்றின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே, வன்னி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணப்படும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓடும் ரயிலில் பாய்ந்து இளம் பெண் மரணம்!

## பொலிஸார் தீவிர விசாரணை

ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கல என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.45 மணியளவில் கொழும்பில் இருந்து பெலியத்த நோக்கி பயணித்த ரயிலில் பாய்ந்து இளம் பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

ஹபராதுவ பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர். கொக்கல பிரதேசத்தில் உள்ள பிரபல சுற்றுலா ஹோட்டல் ஒன்றின் முன்னால் உள்ள ரயில் பாதையில் இந்தப் பெண் குதித்துள்ளார் எனவும் அவருக்கு 30 வயது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஊருபொக்க பிரதேசத்தைச் சேர்ந்தவர்என அடையாளம்காணப்பட்டுள்ளமையுடன், ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டவரின் திருமணங்களுக்காக பல்வேறு சுற்றுலா தளங்கள் அபிவிருத்தி

இலங்கையில் வெளிநாட்டவர்கள் தமது திருமண நிகழ்வுகளை நடத்தும் வகையில் பல்வேறு சுற்றுலா இடங்களை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சிங்கராஜ வனம் மற்றும் கலாசார முக்கோணத்துடன் தொடர்புடைய இடங்களைத் தெரிவு செய்து அங்கு திருமணங்களை ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிகளவான வெளிநாட்டினரை இலங்கைக்கு ஈர்க்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தயாராகி வருகின்றது.

பாதுகாப்பான திருமண இடமாக இலங்கையை மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் திருமணத்தில் வித்தியாசமான அனுபவத்தைப் பெற விரும்பும் வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வந்து திருமணத்தைக் கொண்டாடும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

கொவிட் தொற்றுநோயால் வீழ்ச்சியடைந்த திருமணத் துறையின் வடிவமைப்பு துறை மற்றும் ஏனைய துணைத் துறைகளை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் உதவும் என நம்பப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தனியான பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளது.

இந்தப் பிரிவு இலங்கையில் நிகழ்வுகளை முகாமைத்துவம் செய்யும் நிறுவனங்கள், திருமணங்களை திட்டமிடுபவர்கள், படக் கலைஞர்கள் மற்றும் ஆடை வடிவமைப்பாளர்கள் என அனைத்துத் தரப்பு மக்களையும் ஒரே மேடையில் ஒன்றிணைக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஏற்கனவே ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் திருமணங்களை ஏற்பாடு செய்வதில் இலங்கை மிகவும் பிரபலமாகியுள்ளது, மேலும் புதிய வேலைத் திட்டம் அந்த நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதெனக் குறிப்பிடப்படுகின்றது.

# ஒதியமலையில் யானை உயிரிழப்பு

## காணி உரிமையாளர் பெண் கைது

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் யானை ஒன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

விவசாயத் தோட்டம் ஒன்றுக்குக் கட்டப்பட்ட மின்சார வேலியில் சிக்கி காட்டுயானை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து பார்வையிட்டுள்ளதுடன் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

இதன்போது விவசாய தோட்டக்காணியின் உரிமையாளரான 46 வயதுடைய பெண், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், யானை உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

மின்சார வேலியில் தும்பிக்கையைப் பிடித்தபடி யானை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் 'எழில் மிகு கிராமம்' வேலைத்திட்டம் நாளைஆரம்பம்

## வடக்கு உள்ளூராட்சி சிரேஷ்ட உதவிச் செயலாளர் அறிவிப்பு

யாழில் 'எழில் மிகு கிராமம்' வேலைத் திட்டம் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சால் எதிர்வரும் தினங்களில் ஆரம்பமாகும் என வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ். கைதடியில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

'எழில்மிகு கிராமம் வளமான வாழ்வு' எனும் தொனிப்பொருளிலே ஜனாதிபதியின் கொள்கைக்கு அமைவாகவும் வடக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் உள்ளூராட்சி அமைச்சு அதற்குக் கீழுள்ள திணைக்களங்களும் பங்குதாரர்களும் அனுசரணையாளர்களும் இணைந்து செயற்படுத்துகின்ற முதலாவது செயற்றிட்டமாக இது இருக்கின்றது.

காங்கேசன்துறை வீதியில் இருந்து ஆரம்பித்து செம்மணி வீதி வரை முடிவடைகின்ற 4.12 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கல்வியங்காடு கொக்குவில் ஆடியபாதம் வீதியை தூய்மைப்படுத்துதலும் பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்தான் இந்தச் செயற்றிட்டத்தின் முதலாவது செயற்பாடாக காணப்படுகின்றது.

இந்த செயல் திட்டம் முதலாவது செயல் திட்டமாக அமைகின்றது. இதனுடைய ஆரம்ப கட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் முன்றிலில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட உள்ளது. இதனுடைய தொடர்ச்சியான தன்மை அந்தந்தத் திணைக்களங்களாலும் அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களாலும் தொடர்ச்சியாகப் பெறப்படும் என்பதைக் கூறிக் கொள்கின்றேன்.

உண்மையாகவே இந்தச் செயற்திட்டத்தினுடைய வளர்ச்சிக்கு எமது அமைச்சினுடைய செயலாளர், தமது அமைச்சின் கீழுள்ள உள்ளூராட்சி ஆணையாளருடைய உத்தியோகத்தர்கள் அதே போல வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் அதே போல உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அத்துடன் நல்லூர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள், அனைவரும் இந்தத் திட்டத்துக்காகச் சென்ற வாரங்களில் இருந்து தங்களுடைய உத்தியோகத்தர்களின் ஊடாக பூரண



ஒத்துழைப்பை அந்தப் பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்களுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்கிக் கொண்டு வருகின்றார்கள்.

இந்த ஊடக சந்திப்பில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வடமாகாண பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.சிவநேசன், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் ஆகியோரும் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# 70 வயதில் முதுமாணி பட்டம்; யாழ்ப்பாணத்தவர் சாதனை!





யாழில் 70 வயதில் நபர் ஒருவர் முதுநிலை பட்டம்பெற்று சாதனை படைத்துள்ளார். இதற்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது 70 ஆவது வயதில் பட்டம் பெற்றமையை அவரது மகன் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

'எனது தந்தை தனது 70 ஆவது வயதில் பொது நிர்வாக முதுமானி பட்டம் பெற்றுள்ளார்' என மகன் பதிவிட்டுள்ளார்.

வைத்தியரான மகனின் பேஸ்புக் பக்க பதிவை சிங்கள பேஸ்புக் பக்கங்கள் மீள் பதிவு செய்து வெளியிட்டுள்ளன. அத்துடன் கல்விக்கு வயதில்லை என்பதை அவர் உண்மையாக்கியுள்ளார் எனப் பலரும் 70 வயதான அவரைப் பாராட்டியுள்ளனர்.

எனினும் இந்த கற்கையின் பெறுமதியை இன்றைய காலப்பகுதியினர் மதிக்காமல் பணம் செலுத்தி பட்டங்களைப் பெற்றுக் கொள்கின்றனர் எனப் பலரும் குறிப்பிட்டுள்ளனர். அதன் மதிப்பை உணர்ந்தவர் வயதை பொருட்படுத்தாமல் சாதித்து காட்டியுள்ளார் என பேஸ்புக் பக்கங்களில் பதிவிட்டுள்ளனர்.

# முறைப்பாட்டு தொடர்பு சேவை நல்லூர் பிரதேசசபை அறிமுகம்

## தவிசாளர் மயூரன் அறிவிப்பு



யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபைக்கு முறைப்பாட்டு இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், சபை எல்லைக்குள் சோலைவரி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நல்லூர் பிரதேச சபை மக்களுக்கு சேவைகளை வழங்கும் முகமாக சபைக்கூட்டத்தில் முதலாவது எடுக்கப்பட்ட தீர்மானமாக நல்லூர் பிரதேச சபையில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்காக எட்டு விகிதத்தில் காணப்பட்ட சோலை வரி இரண்டு விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வீதம் குறைவு மக்களுக்கான இருப்பை தக்க வைப்பதற்கும் அவர்களுக்கான உறுதிப்படுத்தலையும் மேற்கொள்வதற்கு தான் நாங்கள் இந்த இரண்டு விகித சோலை வரி குறைப்பு மேற்கொண்டிருந்தோம்.

குறிப்பாக இந்தச் சூழ்நிலையை முற்று முழுதாக குறைப்பதாக தீர்மானித்திருந்தோம். ஆனால், அவர்களுடைய இருப்பிடத்தை உறுதி செய்து கொள்வதற்காகவே இரண்டு விகிதத்தைப் பேணிக்கொள்ளுகின்றோம்.

மேலும் நல்லூர் தொகுதிக்குட்பட்ட மக்களுக்கு வீதியோர துப்புரவு பணிகள் தற்சமயம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக வாய்க்கால் துப்புரவு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்ற மேலும் அனுமதியின்றி வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற விளம்பர பலகைகளை அகற்றுகின்ற செயற்பாடுகளும் தற்சமயம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தொடர்ந்தும் நல்லூர் பிரதேசசபை முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயற்பாடாக ஆடியபாதம் வீதி இருபுறமும் அழகுபடுத்துகின்ற திட்டத்துக்கு அமைவாக தற்சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு முன்னால் நடைபாதை அமைக்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் அதைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரி உடன் இணைக்கும் செயற்றிட்டம் இரண்டாம் கட்டமாகவும் மூன்றாம் கட்டமாக திருநெல்வேலி சந்திப் பகுதியை அழகுபடுத்தும் செயற்திட்டமாகவும் நான்காம் கட்டமாக செம்மணி வளைவு அழகுபடுத்தல் செயற்றிட்டதையும் தொடர்ந்து அதனூடாக நடைபாதைகளை அமைப்பதற்கு நல்லூர் பிரதேசசபை தீர்மானித்திருக்கிறது. இதற்கு ஒவ்வொரு மக்களுடைய ஒத்துழைப்பும் எங்களுக்கு தேவைப்படுகின்றது. குறிப்பாக மக்களினுடைய சோலைவரி பணத்திலேயே நாங்கள் இந்தத் திட்டங்களையும் மேற்கொள்கின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கமைவாக எங்களுடைய ஊழியர்களும் கொவிட் தொற்று காலத்தில் கூட தங்களுடைய அர்ப்பணிப்பான சேவைகளை இன்றுவரை வழங்கி வருகிறார்கள்.

ஆரம்ப காலத்தில் திண்மக் கழிவுகளை நாங்கள் வாரத்தில் இரண்டு நாள்கள் மேற்கொண்டோம். தற்சமயம் வாரத்தில் ஆறு நாள்கள் கூட திண்மக் கழிவுகளை அகற்ற முன் வந்திருக்கின்றோம். அதற்கமைய பொதுமக்கள் விழிப்புணர்வோடு குறித்த திண்மக் கழிவுகளை தரம் பிரித்துக்கொடுக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் நல்லூர் பிரதேச சபையில் முறைப்பாட்டு தொடர்பு சேவை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அந்தச் சேவை இடம்பெற்று வருகிறது. உங்களுடைய முறைப்பாடுகளையும் உங்களுடைய அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளையும் அதன் ஊடாக நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். சேவையின் தொலைபேசி இலக்கமாக 0212222701 இந்த முறைப்பாட்டினை இலக்கத்தின் ஊடாக உங்களுடைய தெரிவித்து தொடர்ச்சியாக பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பங்காற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசியல் குறிக்கோள்களில் எந்த வித்தியாசமும் இல்லை அடையும் மார்க்கம் பற்றியே கட்சிகளுக்குள் முரண்பாடு!

## சி.வி.விக்னேஸ்வரன் கூறுகின்றார்



அரசியல் குறிக்கோள்களில் வித்தியாசமில்லை என்றும் அவற்றை அடையும் மார்க்கம் பற்றியே தமிழ் கட்சிகளுக்குள் முரண்பாடுகள் உள்ளன என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஆறு தமிழ்க் கட்சிகளின் கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை முழுமையாக வருமாறு –

சென்ற வாரம் இந்தியப் பத்திரிகையொன்றின் இலத்திரனியல் ஊடகத்திற்கு ஒரு பேட்டி அளித்தேன். அங்கு நான் கூறிய ஒரு விடயம் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. அதனை இப்பொழுது உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இதுகாறும் பிரிந்து நின்ற ஆறு கட்சிகளும் எவ்வாறு ஒருமித்து அந்தக் கடிதத்தைப் பிரதமர் நரேந்திரமோடிக்கு எழுத முடிந்தது என்று செவ்விகண்டவர் என்னிடம் கேட்டார்.

அதற்கு நான், எமது அரசியல் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில் எமக்குள் அதிகம் வித்தியாசம் இல்லை என்றேன். அவற்றை அடையும் மார்க்கம் பற்றியே எமக்குள் முரண்பாடுகள் உள்ளன என்றேன். அதை விளக்குமாறு கோரப்பட்ட போது, நான், எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்துமே 'ஒற்றையாட்சி வேண்டாம் சமஷ்டி ஆட்சி முறையே வேண்டும்' என்று தான் கோரி வருகின்றோம். – என்றேன்.

எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒருபடி மேலே போய் கூட்டு சமஷ்டியை எமது குறிக்கோளாகக் குறிப்பிட்டுள்ளோம் என்றேன். ஆகவே, எமது குறிக்கோள் ஒன்றே அதனை அடையும் விதத்தில் எமக்குள் வேற்றுமைகள், வித்தியாசங்கள், முரண்பாடுகள் உள்ளன. நான் அங்கு கூறியமையை இங்குள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன். ஏதோ காரணத்துக்காக செவ்வி கண்டவர் இக்கேள்வியையும் பதிலையும் தணிக்கை செய்துவிட்டார்.

ஆகவே, முக்கியமான ஒரே குறிக்கோளை வைத்திருக்கும் எமது ஆறு கட்சிகளும் இன்று இந்த கருத்தரங்கத்தை ஒருமித்துநடத்துவதில்வியப்பொன்றுமில்லை. ஏதோ காரணத்திற்காக செவ்வி கண்டவர் இக் கேள்வியையும் பதிலையும் தணிக்கை செய்துவிட்டார்.

இந்தியாவிற்கெதிரான கருத்துடைய எமது 24 கரட் கட்சி, அதன் தாய்க் கட்சியின் யாப்பு இன்று வரையில் ஒற்றையாட்சியே எமக்கு வேண்டும் என்று கூறினாலுங்கூட, தேர்தல் காலத்தில் சமஷ்டியே தமது குறிக்கோள் எனக் கூறி வருகின்றார்கள். ஆகவே, அவர்களும் கொள்கை ரீதியாக எங்களுடன் தான். மலை உச்சியில் இருந்து உண்மை உணர்ந்து அவதரணம் செய்து மக்களுடன் மக்களாக நின்று சிந்தித்து எங்கள் எல்லோருடனும் ஒருங்கிணைந்து செயலாற்ற அந்தக் கட்சி ஒத்துக்கொண்டிருந்தமையால் எமது மக்களின் அரசியல் பலம் இன்னும் மேலோங்கியிருக்கும். இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை என்று அவர்களுக்கு இந்த உரையின் ஊடாக அன்புடன் எடுத்துக்கூறிவிட்டு இன்றைய விடயத்துக்கு வருகின்றேன்.

'ஈழத் தமிழர் தீர்வில் நாடாளுமன்றத்தின் வகிபாகம்' என்பது விடயதானம்;. எனவே தமிழ; ஈழத் தமிழருக்கு அப்பாற் போய் இலங்கை எங்கிலும் வாழும் சகல தமிழ் மக்களையும் உள்ளடக்கியே விடயம்; நிற்பதை நாங்கள் அவதானிக்க வேண்டும். தமிழீழம் என்றால் இலங்கையின் வடக்கு – கிழக்கையே அச் சொல் குறிக்கும். ஈழம் என்றால் முழு இலங்கையையும் குறிக்கும். எனவே, வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு அப்பால் சென்று மலையகத் தமிழர்களையும் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த கொழும்புத் தமிழர்களையும் உள்ளடக்கிய மற்றைய மாகாணத் தமிழ் மக்களையும் ஒன்று சேர்த்தே மேற்படி விடயதானம்; தரப்பட்டுள்ளது.

அதாவது பொதுவாக இந்நாட்டின் தமிழ் மக்களின் தீர்வில் நாடாளுமன்றத்தின்வகிபாகம்என்னவாக இருக்கலாம் என்பதே கேள்வி. அப்படித்தான் நான் இந்தத் விடயதானத்தைப் புரிந்து கொண்டுள்ளேன். எனினும் நான் பொதுவாகவும் தமிழீழத் தமிழர்கள் பற்றி சிறப்பாகவும் சிந்தித்துப் பேச விழைகின்றேன்.

முழு நாட்டினதும் தமிழ் மக்களைப் பற்றிப் பார்க்கும் போது நாம் சுதந்திரம் கிடைத்த காலத்துக்கு முன்பிருந்தே ஆராய வேண்டியுள்ளது. ஏனென்றால் இலங்கைக்கான நாடாளுமன்றம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய சதிகள் சுதந்திரத்துக்கு முன்னரே தொடங்கிவிட்டன. அச்சதிகளே இன்று இந்த ஒற்றையாட்சிக்கு உட்பட்ட நாடாளுமன்றத்தை எமக்குத் தந்துள்ளன.

சதிகள் பற்றி ஆராய முன் சுமார் மூன்று நிமிடங்களுக்கு இந்நாட்டின் தமிழர்களைப் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வையுடன் தொடங்கலாம் என்று நினைக்கின்றேன். ஏன் என்றால் எம்முள் பலருக்கு இலங்கைத் தமிழரின் வரலாறு பற்றி அதிகம் தெரியாது. சிங்கள மக்களைப் போல மகாவம்சக் கதைகளையே அவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கையின் தமிழ் பேசும் மக்களில் இலங்கைத் தமிழர்கள் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். இங்குள்ள ஆதிவாசிகளான தமிழ்பேசும் மக்களுடன் அந்தந்தக் காலகட்டத்தின் போது மேலதிகத் தமிழர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளார்கள் என்பதுதான் வரலாறு. நாம் பலதரப்பட்ட தமிழர்களின் வாரிசுகள்! பாண்டிய, பல்லவ, சோழ, சேர, ஆரிய சக்கரவர்த்திகள் போன்றோர் இங்கு வந்த போது அவர்கள் தம் மக்களையும் தம் நாட்டில் இருந்து கொண்டு வந்து இங்கு குடியேற்றினார்கள். கடைசியாக வந்தவர்களே பிரிட்டிஷர் இங்கு கொண்டு வந்த எமது மலையக சகோதர சகோதரிகள். மதத்தால் வித்தியாசமானவர்களாக இருந்தாலும், பெரும்பான்மை கிழக்கிலங்கை முஸ்லீம்களும் தென்னிந்தியாவின் குறிப்பிட்ட இடங்களில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்களே. அவர்களின் அழகு தமிழ்ப் பேச்சுவழக்கு அதனை ருசுப்படுத்துகின்றது.

ஆதித்தமிழர்கள் குமரிக்கண்ட மக்களின் வழித்தோன்றல்கள் என்று கூறப்பட்டாலும் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தான் இரும்புக் காலப் பண்பாடு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது என்றுசரித்திர ஆசிரியர்கள் இதுவரையில் கணித்துள்ளார்கள். கீழடி அகழ்வுகள் எமது சரித்திர அறிவை மாற்றியது போல் இந்து சமுத்திர ஆழ்கடல் ஆராய்ச்சிகள் குமரிக்கண்ட நாகரிகம் பற்றி ஒரு நாள் பறைசாற்றுவன. அப்போது எமது சரித்திரப் பார்வை வேறுபடும். எனினும் தற்போதைய சரித்திரக் கணிப்பைப் பார்ப்போம்.

### தமிழ்நாட்டின்தெற்குமக்களுடன் தொடர்புடையவர்கள் யாழ்ப்பாணத்தார்

தலைசிறந்த இந்திய வரலாற்றாசிரியரான விமலா பேக்லே அவர்கள் யாழ் குடாநாட்டில் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தமிழ் நாட்டின் தெற்கில் வாழும் தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளையும், ஒத்தியல்புகளையும் கொண்டிருந்தார்கள் என்று கூறியுள்ளார்; கலாசார ரீதியாக புத்தளத்தில் இருக்கும் பொம்பரிப்புக்கும் சுன்னாகம் – கந்தரோடைக்கும் இடையில் நெருங்கிய ஒற்றுமைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதே போன்று தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கும் ஆதிச்சநல்லூரில் கண்டுபிடித்த அகழ்வுகளும் ஒரே மாதிரி காணப்பட்டுள்ளன. இதனைப் பேராசிரியர் சுதர்ன் செனவிரத்ன, பேராசிரியர் இந்திரபாலா போன்றவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அந்த அகழ்வுகளுள் சவ அடக்க தாழிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தாழி சவ அடக்க முறை மூன்று இடங்களிலும் பின்பற்றியமை தெரிய வந்துள்ளது. மட்பாண்டத்தில் செய்யப்பட்ட பெரிய தாழிகளில் இறந்தவர் ஒருவருடைய உடலையோ, சாம்பலையோ அவற்றில் இட்டு இறந்தவர் பாவித்த முக்கியமான உபகரணங்களையும் அதனுள் போட்டு நிலத்தில் அடக்கம் செய்யும் முறையே தாழி சவ அடக்கமுறை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் இத் தாழிகள் பல அண்மைக் காலங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### மகாநாம பிக்குவின் கற்பனையே விஜயனும் 700 சகாக்களும்!

இலங்கையின் ஆதிவாசிகள் வட இந்தியாவில் இருந்துவந்தவர்கள் என்ற கருத்து தற்போது கைவிடப்பட்டுள்ளது. விஜயனும் அவரின் 700 சகாக்களும் வட இந்தியாவில் இருந்து வெளியேறி இங்கு வந்தார்கள் என்பதற்கு எந்தவித சான்றுகளும் இந்திய மாநிலங்கள் எவற்றிலும் இல்லை. மகாவம்சத்தை எழுதிய மகாநாம என்ற பிக்குவின் கற்பனையில் பிறந்தவர்களே மேற்படி விஜயனும் அவனின் சகாக்களும். பௌத்த மத விருத்திக்காக எழுதப்பட்ட கற்பனைக் கதையே மகாவம்சம்.

பல வருட காலமாக ஆதியில் இருந்து அதாவது 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து எமது தமிழ் மக்களும் சிங்களவர்களும் இந்நாட்டில் சம காலத்தில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்ற பிழையான கருத்தை எம் மக்கள் கொண்டிருந்திருக்கின்கிறார்கள்.

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் அதாவது 1500 ஆண்டுகளுக்கு முன்னர் மகாவம்சம் என்ற நூல் பாளிமொழியில் வெளி வந்த போது சிங்களவர் என்ற ஓர் இனமே அப்பொழுது உருவாகவில்லை. சிங்கள மொழி பாவனைக்கு வந்தது கி.பி 6 ஆம் மற்றும் 7 ஆம் நூற்றாண்டு அளவில் தான். சிங்களமொழியின் முதல் இலக்கண நூலான 'சிதத் சங்கராவ' கி.பி 13 ஆவதுநூற்றாண்டில்தான்வெளிவந்தது. 2 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் சிங்களமொழி இருந்திருந்தால் ஏன் அவர்களின் இலக்கணநூல் 700 ஆண்டுகளுக்கு முன்னர் தான் வெளிவந்திருக்க வேண்டும்? சிங்களம் என்பது மிக அண்மையமொழி. தமிழ், பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளினதும் கிராமிய பாரம்பரிய மொழிகளினதும் சேர்க்கையே சிங்களமொழி. வேண்டுமென்றே சிங்களமொழியினதும் சிங்களவர்களினதும் வரலாறு திரிவுபடுத்திக் கூறப்பட்டு வந்துள்ளது.

வரலாற்று ரீதியாகவும் டி.என்.ஏ. சோதனைகள் மூலமாகவும் தற்போது அறிந்து கொள்ளப்பட்டிருக்கும் வரலாற்று உண்மை என்னவென்றால் சிங்களவரின் மூதாதையர்கள் இலங்கைக்கு வெளியில் இருந்து வரவில்லை. ஆரியர் வருகை என்பது கட்டுக்கதை. உள்நாட்டிலேயே ஆதியில் இருந்து வந்த மக்கள் தான் தமிழர்களதும் சிங்களவர்களதும் மூதாதையர்கள் என்பது இன்று சரித்திர ஆசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இரு இனங்களும் ஒரே மூதாதையர்களின் வழித்தோன்றல்கள் என்பது வரலாற்று ரீதியாக தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்கள் வாழ்ந்து வந்த காலம் இற்றைக்கு 3 ஆயிரம் வருடங்களில் இருந்து இற்றை வரையிலாகும். எமது மூதாதையர்களில் சிலர் சிங்கள மக்களாக மாறியமைசிங்களமொழிநடைமுறைக்கு வந்த கி.பி 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டுகளிலாகும். பின்னர் வந்த இனம் இன்று நாடாளுமன்றத்தில் முதன்மை இனமாக மாறியுள்ளது.

எமக்கு சுதந்திரம் கிடைத்த காலத்தில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக இருக்க, மற்றைய மாகாணங்களில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருந்தார்கள். ஆகவே, தமிழ் பேசும் வடக்கு, கிழக்கு மாகாணம் ஓர் அலகாகவும் மற்றைய மாகாணங்கள் இன்னோர் அலகாகவும் மொழிவாரியாகக் காணப்பட்டன. எனவே, நாடு பிரித்தானியரால் அவ்வாறே பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு மொழிவாரியாகப் பிரித்துப் பார்த்திருந்தால் சமஷ்டி முறையிலான அரசியல் யாப்பு கட்டாயமாகத் தரப்பட்டிருக்கும். ஏனென்றால் கண்டியர்கள் கூட சமஷ்டியையே விரும்பினார்கள். அவ்வாறு இலங்கைக்குச் சமஷ்டி வராது செய்தவர் தான் இலங்கை தேசத்தின் தந்தை என்று சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டுவரும் டி.எஸ்.சேனநாயக்க. அவரே இலங்கையின் முதல் பிரதமரானார். ஆனால் அவர் தனது திருகுதாளங்களை சுதந்திரம் கிடைக்க முன்னரே தொடங்கியிருந்தார்.

தமிழ் மக்களுக்கு எதிரான முதல் சதி அவராலும் பின்னர் ஆளுநர் நாயகமாக பதவி வகித்த சேர். ஒலிவர் குணதிலகவாலுமே தான் இயற்றப்பட்டது. அவர்கள் இருவரும் எப்படியாவது இலங்கை ஓர் ஒற்றையாட்சிநாடாகஆங்கிலேயர்களால் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற திடமான நினைப்பில் இருந்தார்கள். அதனால்தான் 1943 இல் பிரித்தானியா கூடிய அதிகாரங்களை இலங்கைக்கு வழங்க இருப்பதாக அறிவித்த பின் சேர் ஜவர் ஜெனிங்க்ஸ் என்ற அரசியல் யாப்பு சட்ட நிபுணருடன் சேர்ந்து இலங்கையின் சிறுபான்மையினர் எவருடனும் கலந்தாலோசியாது ஓர் ஒற்றையாட்சி அரசியல் யாப்பு வரைவை இலங்கைக்கெனத் தயாரித்து பிரித்தானிய கொலனி ஆதிக்க அரசிற்கு அவசர அவசரமாக கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

அப்படியிருந்தும் கொலனி அரசாங்கம் சிறுபான்மையினரை கலந்தாலோசியாது தமக்கு தரப்பட்ட வரைவை ஏற்காது சோல்பரி பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழுவை இங்கு அனுப்ப ஆயத்தமானார்கள். இதைக் கண்டு அதிர்ச்சியுற்ற சேனநாயக்காவும் குணதிலகாவும் இரண்டாவது சதியில் இறங்கினார்கள். இலண்டன் சென்று ஆணையாளர்களைச் சந்தித்து அவர்களைத் தம்பக்கம் ஈர்ப்பதே அந்தச்சதி. ஆணையாளர்கள் இங்கு வருமுன் சேர் ஒலிவர் குணதிலக இலண்டன் சென்று ஒலிவர் ஸ்டன்லி என்ற பிரித்தானிய மாநில செயலாளரைச் சந்தித்து அவருக்கூடாக சோல்பரி பிரபுவைச் சந்தித்து தமது வரைவே இலங்கைக்குச் சிறந்தது என்ற கருத்தை முன்கூட்டியே ஆணைக்குழுத் தலைவரின் மனத்தில் ஆழப்பதியப் பண்ணினார்.

இவ்வளவையும் மறைமுகமாகச் செய்துவிட்டு இருவரும் மூன்றாவது சதியில் இறங்கினார்கள். 22.12.1944 இல் சோல்பரி ஆணைக்குழுவினர் இங்கு வந்தபோது டி.எஸ். சேனநாயக்கா 'இந்த ஆணைக்குழு எமக்கு வேண்டாம்' என்ற சுலோகத்தை எழுப்பி அதிகாரபூர்வமாக ஆணைக்குழுவைப் பகிஷ்கரித்தார். இதன் காரணம் கண்டியர்களாலும் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க போன்றவர்களாலும் தமிழர்களாலும் சமஷ்டி முறை பற்றி சமர்ப்பணங்கள் எழலாம் என்பதால். அவ்வாறான சமர்ப்பணங்களைத் தடுக்கவே இவ்வாறு செய்தார்.

ஆகவே கண்டியர்களும் பண்டார நாயக்கவும் பொன்னம்பலமும் சமஷ்டியை முன்வைக்க முன் பகிஷ்கரிப்பின் மூலமாக அவர்களின்

☞9

## அரசியல் குறிக்கோள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வாய்களை டி.எஸ்.சேனநாயக்க அடைத்து விட்டார். இவ்வளவுக்கும் ஏற்கனவே தமது வரைவை ஆணையாளர்கள் ஏற்கவேண்டும் என்பதற்கான பூர்வாங்க ஆயத்தங்களை டி.எஸ்.சேனநாயக்கவும் சேர் ஒலிவரும் சேர்ந்து செய்த பின்னர் தான் பகிஷ்கரிப்பு நடந்தது. சமஷ்டியை ஆதரிக்கவேண்டிய ஜி.ஜி.பொன்னம்பலம் தன் கெட்டித்தனத்தை வெளிக்கொண்டு வருகின்றமைபோல் 50 க்கு 50 ஐ முன்வைத்தார். அவர் சம;டியை முன்வைத்திருக்கலாம். ஆனால் அவரின் 50க்கு 50ஐ ஆணைக்குழு நிராகரித்தது. ஒற்றையாட்சி முறையை ஆதரித்து தமது அறிக்கையை அவர்கள் வெளியிட்டனர். சேனநாயக்க மீனுக்கு வாலையும் பாம்புக்குத் தலையையும் காட்டி தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டார்.

சேர் ஐவோர் ஜெனிங்ஸ் ஒருமுக்கிய கருத்தை அப்போது வெளியிட்டிருந்தார் – 'சோல்பரி ஆணையாளர்களின் சிபார்சு என்று புதிய அரசியல் யாப்பு வரைவு அழைக்கப்பட்டாலும் உண்மையில் சேனநாயக்காவின் வரைவே அது' என்றார். 'செனட் சபை மட்டுந்தான் ஆணையாளர்களின் சிபார்சு' என்று கூறினர். (ஹூலுகல்ல 2014 இல் எழுதிய நூலின் 177 ஆம் பக்கத்தில் இவையாவும் கூறப்பட்டுள்ளன. செல்வேந்திரா சபாரட்ணத்தால் விரைவில் வெளியிடப்படப் போகும் நூலிலும் இவை முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளன.)

ஆகவே நாடாளுமன்றத்தின் வகிபாகம் என்று நாங்கள் ஆராயும் போது அதன் பின்னணியில் நடைபெற்ற பல திருகுதாளங்களை நாங்கள் மனதில் வைத்தே இக் கருப்பொருளை நோக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் வகிபாகம் பற்றிப் பார்க்கும் போது 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பு நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் வரையில் நாடாளுமன்றமே தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முக்கிய பங்கு வகித்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. 1948 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு தனது உறுப்புரை 29(2) இன் மூலமாக சிறுபான்மையினரின் உரித்துக்களை ஓரளவு பாதுகாக்க எத்தனித்தது. ஆகவே, சிங்கள பெரும்பான்மையினரின் ஆதிக்க நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டி பெரும்பான்மையினரை ஓரளவு பின்வாங்கச் செய்யக் கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும் 'சிங்களம் மட்டும்' சட்டம் உறுப்புரை 29(2) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இது சிறுபான்மையினருக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தாலும் தொடர்ந்து நாடாளுமன்றமே தமிழ் மக்களின் உரித்துக்களுக்கான போராட்டத் தளமாகத் தொடர்ந்து இருந்து வந்தது.

அடுத்த காரணம் 1972 வரையில் கூட நாடாளுமன்றத்தில் ஆங்கில மொழியே கோலோச்சி வந்தது. அதன் காரணத்தால் சகல இன மக்களும் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே பேசியதால் உடனுக்குடன் இரு தரப்பாரின் கருத்துக்களும் மற்றையவர்களால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. கருத்துப் பரிமாற்றங்கள் மூன்றாம் நபரான மொழி பெயர்ப்பாளர் உதவியின்றி நேரடியாக நடைபெற்றன.

### 1972 ஆம் ஆண்டு முதலாவது அரசியல் யாப்பு தமிழ் எம்.பிக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை

1972 ஆம் ஆண்டின் முதல் குடியரசு அரசியல் யாப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்கள் வெளிநடப்பு செய்தனர். அப்பொழுதிருந்து நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றம் ஓர் அரசியல் பேசும் தக்க புகலிடமாகத் தென்படவில்லை. சிங்கள ஆதிக்கம் பெருகியது. அதே நேரம் காணி உச்ச வரம்புச் சட்டம், வீடுகள் உச்ச வரம்புச் சட்டம் ஆகியன 1972 ஆம் ஆண்டின் பின்னர் வெளிவந்து சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆகவே, 1972 இன் பின்னர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றம் வெறும் அரசியல் பேசும் அரங்கமாகவே அமைந்தது. ஆனால், அவர்கள் பேச்சுக்கள் சிங்கள மக்களைப் போய் அடையவில்லை. இதற்குக் காரணம் எமது நாடாளுமன்றம் பெரும்பான்மையினரது அடாவடித்தனத்துக்குத் துணை போக சம்மதித்தமையே. ஜனநாயக முறைமைகள் பேணப்படவில்லை. சிறுபான்மையினரின் கருத்துக்கள் பொருட்படுத்தப்படவில்லை. அத்துடன் சிங்கள ஊடகங்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்களைத் தமது ஊடகங்களில் வெளியிடப் பின்நின்றனர். அவர்களின் ஆங்கிலப் பேச்சுக்கள் கூட கொழும்பு ஊடகங்களில் வெளிவருகின்றமை மிக அரிதாகவே இருந்தன. இதனால் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் சிங்கள மக்களைச் சென்றடையவில்லை. எவ்வளவு தான் உண்மைகளைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தாலும் அவை சிங்கள மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை. தமிழர்கள் யாவரும் பயங்கரவாதிகளே என்ற எண்ணந்தான் சிங்கள மக்களிடையே மேலோங்கியது. இதனால் தமிழ் மக்களின் உண்மை நிலை நாடாளுமன்றத்தினுள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு முறை சிங்கள ஊடகத்தின் கேள்விக்கு சிங்களத்தில் பதில் அளித்தேன். அப்போது அந்த சிங்கள ஊடகவியாளர் உங்கள் உறுப்பினர்கள் இது பற்றி எதுவுமே கூறவில்லையே என்றார். அப்போது நான் கூறினேன் 'நாங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறிக்கொண்டு தான் இருக்கின்றோம். உங்களுக்குத்தான் விளங்கவில்லை' – என்றேன்.

ஆனால் 1972 இன் முன்னர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேசியவை பொது மக்களைப் போய் அடைந்தன. இன்றோ ஆங்கிலத்தில் பேசினாலும் சிங்கள மக்களைச் சென்றடைவதில்லை. தமிழில் பேசினாலும் எமது கருத்துக்கள் சிங்களப் பெரும்பான்மை மக்களை அடைவதில்லை.

இந்தக் கால கட்டத்தில்த் தான் தமிழ் இளைஞர்கள் அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்திக்கத் தொடங்கினர். நாடாளுமன்றத்தில் எத்தகைய அறிவுக் கூர்மைசார் பேச்சுக்களை நிகழ்த்தினாலும் அவற்றால் பயன் ஏதும் புலப்படவில்லை என்று கண்டு வன்முறையை விடுதலை ஆயுதமாக்கினர்.

2009 இல் இளைஞர்களின் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரை தமிழ் ஈழத் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத்தின் வகிபாகம் மிகக் குறைந்தே காணப்பட்டது. எனினும் தமிழ்ப் பிரதிநிதிகள் 22 பேர் அப்போது இருந்துங்கூட அவர்களால் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக எதுவும் செய்ய முடியவில்லை. காரணம் போர் நடந்துகொண்டிருந்தமையே.

2009 ஆம் ஆண்டின் பின்னரான நாடாளுமன்றத்தை எடுத்துப் பார்த்தோமானால் நாடாளுமன்ற தமிழ் சிங்கள உறுப்பினர்களுக்கிடையேயான இடைவெளி நீண்டு கொண்டு செல்வதை அவதானிக்கலாம். மலையகத்தமிழர்கள் சிலர் சிங்களத்தில் பேசுவதை சிங்கள உறுப்பினர்கள் புரிந்து கொள்கின்றார்கள். ஆனால் தமிழில் பேசுவோரின் பேச்சின் மொழி பெயர்ப்பைக்கூட கேட்கும் பொறுமை சிங்கள உறுப்பினர்களுக்கு இல்லை என்றே சொல்லலாம்.

அடுத்து தமிழ் பேசும் உறுப்பினர்களின் தொகை குறைந்து வருகின்றது. அரசாங்கம் தமிழ்ப் பேசும் உறுப்பினர்களின் கருத்துக்களைப் பொருட்படுத்துவதில்லை. ஆங்கிலம் கூட பல சிங்கள உறுப்பினர்களுக்கு புரிவதில்லை. ஆகவே, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் நாடாளுமன்றத்தின் வகிபாகம் குறைந்து கொண்டே செல்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் ஆர்ப்பாட்டங்கள், காணி அபகரிப்பை எதிர்க்கும் கிராமத்தவரின் எதிர்ப்புப் போராட்டங்கள், மீனவர்களின் போராட்டங்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நடைபவனி போன்றன மக்கள் தாங்களே களத்தில் முன் நின்று போராட வேண்டிய அத்தியாவசியத்தை அவரகளுக்கு உணர்த்தியுள்ளன.

மக்கட் தலைவர்களும் இதையுணர்ந்து நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டே சர்வதேச ரீதியாக எவ்வாறு தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்பது பற்றி சிந்தித்து செயலாற்றி வருகின்றார்கள்.

நாடாளுமன்றத்தின் வகிபாகத்தை ஆராயும் போது ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது ஒற்றையாட்சியின் கீழ் நாம் கோருவது சமஷ்டி அல்லது இணைப்பாட்சியையே!

ஒற்றையாட்சி முறையைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் ஒரு போதும் அதன் இறுக்கத்தைத் தளரவிட முன்வரமாட்டார்கள். சமஷ்டி என்பது அந்த இறுக்கப் பிடியைத் தளரச் செய்வது. நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு சிங்களப் பிரதிநிதித்துவம் இருக்கும் போது சிங்கள மக்களின் அளுங்குப் பிடிக்குப் பாதிப்பு ஏற்படும் வண்ணம் எதனையும் செய்ய சிங்களப் பிரதிநிதிகள் எவரும் முன்வரமாட்டார்கள். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஓர் உதாரணம் கூறுகின்றேன். பஸ்ஸில் பயணம் செய்யும் போது பெண்களுக்கென்று சில ஆசனங்கள் அவற்றில் ஒதுக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். அந்த ஆசனங்களில் ஆண்கள் உட்கார்ந்திருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். கேட்டால் 'இப்பொழுது தானே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை தந்தாகிவிட்டதே. பின் எதற்கு உங்களுக்கு பிரத்தியேக ஆசனங்கள்' என்று கூறி இருக்கைகளைத் தர மறுக்கின்றார்கள் ஆண்கள். வாகன சாரதி, கண்டக்டர் யாவருமே ஆண்கள். அவர்களும் சம உரிமை பற்றிக் கூறி எந்த நடவடிக்கைகளையும் எடுக்க மறுக்கின்றார்கள். ஆகவே அங்குள்ள பெரும்பான்மையினரான ஆண்களிடம் பேசிப் பயனில்லை. வேறு வழிமுறைகளையே பெண் கள் கையாள வேண்டும்.

நான் என்ன கூற வருகின்றேன் என்றால் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரமும் பலமும் கொண்டவர்கள் இணைப்பாட்சிக்கு ஒத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகவே தான் சர்வதேச கருத்துப் பரிமாற்றங்களின் மூலம் நெருக்குதல்களை ஒற்றையாட்சியின் மீது ஏற்படுத்த வேண்டிய காலகட்டம் தற்போது உருவாகியுள்ளது. இதை உணர்ந்து தான் முதலமைச்சர் என்ற எனது பதவியைப் பயன்படுத்தி இங்கு வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபை அலுவலர்களுக்கும் எமது நிலை பற்றிய விரிவான விவரங்களையும் புள்ளி விவரங்களையும் என் பதவியின் போது தந்துதவினேன். அப்போதைய செயலாளர் நாயகம் ஹூசைன் எமது ஆவணங்களைப் பரிசீலித்ததின் பலனாக எமக்கு சாதகமான கருத்துக்களை அக்கால கட்டத்தில் எடுத்தியம்பினார்.

சர்வதேச ரீதியாக நாங்கள் எமது அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாட்ஜுளுமன்ற உறுப்பினர் பதவி ஒரு சார்பான ஏதுவாக அமைகின்றது. அன்றாடப் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றைத் தீர்க்க முடியும். ஆனால், தமிழீழத் தமிழர்களின் அரசியல் தீர்வில் நாடாளுமன்றத்தின் வகிபாகம் தற்போது மிகவும் வேதனைக்குரிய அவல நிலையையே அடைந்துள்ளது.

### மாகாணங்கள் இல்லாமல் போய் மாவட்ட ஆட்சியே வரவுள்ளது!

அத்துடன் இன்னுமொரு விடயம் ஆராயப்பட வேண்டியுள்ளது. வெளிநாடொன்றுடன் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றிப் பேசி எமது ஆறு கட்சிகளும் துரோகம் இழைத்துவிட்டன என்று ஒரு சாரார் குற்றம் சாட்டி வருகின்றார்கள். அவர்கள் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு தமிழ் மக்கள் கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் என்று அரசாங்க அமைச்சர் ஒருவர் கூறியமையே. இவர்களின் அரசியல் அப்பாவித்தனம் இதில் இருந்து புலப்படுகின்றது. புதிய அரசியல் யாப்பு அதிகார மையத்தை மாகாணத்தில் இருந்து மாவட்டத்துக்கு மாற்ற இருக்கின்றது. மாவட்டங்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை உண்டுபண்ணி 'பார்த்தீர்களா! உங்கள் கிராமங்கள், மாவட்டங்கள் இனித் தம்மைத்தாமே ஆளப் போகின்றன' என்று கூறப் போகின்றார்கள். வடக்கு, கிழக்கு இணைப்பு, மாகாண அரசாங்கம் அல்லது அரசாங்கங்கள் என்பவற்றைத் தாண்டி மத்தியின் கைப்பொம்மைகளாக மாவட்டங்களை ஆக்கவிருக்கின்றார்கள். எம்மைக் குறைகூறுவோர் இலவு காத்த கிளிகளாக மாறப் போகின்றார்கள். புதிய அரசியல் யாப்பு எமது மாகாணசபை முறைமையை அடியோடு அழித்து இந்தியாவின் தலையீட்டையும் அண்டவிடாமல் செய்துவிடும். இதை உணர்ந்து எம்மைக் குறைகூறுவோர் விழித்துக் கொள்ள வேண்டும். பதின்மூன்றுக்குப் பதில் மாவட்ட அரசாங்கமே வரவிருக்கின்றது. மாவட்டங்கள் மத்தியின் அதிகாரத்தினுள் சிறைப்பட்டிருப்பன.

நாங்கள் எங்கள் மக்களுக்கு உணர்வூட்டுவதிலும் பார்க்க அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். எமது அரசியல் போராட்டங்களுக்கு மக்களின் நேரடி நடவடிக்கைகளே வலுச் சேர்க்கக்கூடும். இனிவருங்காலத்தில் நாடாளுமன்றத்தில் பேசுவதால் விளையும் நன்மை மிகக் குறைவே. ஆனால் மக்களுக்குப் பிழையான அரசியல் அறிவைப் புகட்டக்கூடாது. ஆகவே, நாடாளுமன்றம் தமிழீழத் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு தீர்வைத் தராது ஆட்சியில் உள்ளவர்களுக்கு நெருக்குதல்களை நாம் உருவாக்காவிட்டால் – என்று தெரிவித்தார்.

---

## ஊடக ஜாம்பவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றது. அந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், வி. இராதாகிருஷ்ணன் மற்றும் சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவரும், எஸ்.டி.சிவநாயகத்தின் புதல்வருமான எஸ்.டி.எஸ். உதயநாயகம் ஆகியோர் பங்குபற்றினர்.

---

## தமிழ்க் கட்சிகள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற கருத்தரங்கில் தமிழீழ விடுதலை இயக்கம் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனும், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தவும் பங்கேற்று உரையாற்றியிருந்தனர்.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி. கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர்களான யதீந்திரா, நிலாந்தன் ஆகியோரும் பங்கேற்று உரையாற்றினர்.

எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை என்பதுடன் அக்கட்சியின் பிரதிநிதிகள் யாரும் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அதேவேளை, நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். நகரில் இடம்பெற்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் மாவை சேனாதிராஜா கலந்துகொண்ட நிலையில் கருத்தரங்கில் கலந்துகொள்ளாதமை அங்கிருந்தவர்கள் மத்தியில் கேள்வியை எழுப்பியுள்ளது.

ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பாரதப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டல்களை வழங்குவதற்காக இந்த மக்கள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்தரங்கில் பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

---

## இனி நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எந்தக் காலத்திலும் ஒரு தீர்வைத் தராது – ஆட்சியில் உள்ளவர்களுக்கு நெருக்குதல்களை நாம் உருவாக்காவிட்டால்."

– இவ்வாறு ஆறு கட்சிகளின் பெயரில் நேற்று யாழ் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

(அவர் அங்கு ஆற்றிய உரையின் முழு விவரம் 8,9 ஆம் பக்கங்களில்)

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி; அமைச்சர் டக்ளஸ் ஆராய்ந்தார்







கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திகள் தொடர்பான இடங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பூநகரி பிரதேச சபையின் கீழ் உள்ள பஸ் நிலையம் கட்டப்பட்டு அவற்றை மக்கள் பாவனைக்காகப் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்ட போது மேற்படி பஸ் நிலையத்தில் பஸ்கள் நிறுத்தப்படாமையால் வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டு இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்ய முடியும் என பிரதேச சபையின் தவிசாளரிடம் உறுதியளித்துள்ளார்.

இதே போன்று கடற்றொழிலில் ஈடுபடுபவர்களின் குறை நிறைகளையும் கௌதாரி முனை சென்று கடற்தொழி லாளர்களுடன் இந்தியா கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் எதுவும் இருக்கிறதா என்றும் கடற்றொழில் ஈடுபடுபவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும், வருகின்ற கச்சதீவு திருவிழா தொடர்பாக ஊடகவியலாளர் வினவிய போது கடந்த வருடம் போன்று இந்த வருடமும் கொவிட் காரணமாக பூசகர்கள் மாத்திரம் சென்று பூஜை வழிபாடு செய்ய வேண்டிய நிலை வரும் போல இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றவர்களில் ஒரு பகுதியினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மீன்பிடிக் குல்லாக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாங்குளத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண நீர்பாசன திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீர் வேளாண்மையை ஊக்குவித்து எமது தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் தனது திட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான திட்டங்களை பயனாளர்கள் சரியாக பயன்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்ததுடன் நன்னீர் மீன்பிடியை மேலும் ஊக்குவித்து வலுப்படுத்த கடல்தொழில் அமைச்சின் ஊடாக தேவையான உதவிகளை வழங்கத் தயாராக உள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

# அரசியலுக்கு வரத் தயாராகும் மைத்திரிபாலவின் சகோதரர்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் முன்னணி அரிசி வர்த்தகருமான டட்லி சிறிசேன அரசியலில் ஈடுபடத் தயாராகி வருகிறார் எனத் தெரியவருகிறது.

தேசிய அரசியலில் ஈடுபடுமாறு பல்வேறு தரப்பினர் மற்றும் தனக்கு நெருக்கமானவர்கள் பல காலமாக விடுத்து வரும் அழைப்புக்கு அமைய அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

டட்லி சிறிசேனவின் டிக்டொக் காணொலி ஒன்றும் தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாக பகிரப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. அதில் அவர் அரசியல்வாதி போல் இலங்கையின் தேசிய ஆடையை அணிந்துள்ளதுடன் மேலும் பல உடைகளில் தோற்றியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

டட்லி சிறிசேன இலங்கையின் முன்னணி அரசி வர்த்தகர்களில் ஒருவர் என்பதுடன் அவரது நிறுவனம் உட்பட சில நிறுவனங்களே இலங்கையின் தேசிய சந்தையில் அரிசிகளின் விலைகளை தீர்மானிப்பதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக நாட்டில் அரிசி விலைகள் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக அரசாங்கம், இந்தியா, சீனா, மியன்மார், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

# புதையல் தோண்டிய ஒருவர் கைது ஆறு சந்தேக நபர்கள் தப்பியோட்டம்







அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவில் வான் பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலும் ஆறு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேக நபர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வுத் துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராணுவம் மற்றும் அடம்பன் பொலிஸார் இணைந்து குருவில் வான் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு தொகுதி பொருள்களை இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் அடம்பன் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

தப்பியோடிய சந்தேக நபர்கள் 6 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்த குற்றச்சாட்டு; 12 வருடங்களுக்கு பின் அரசியல் கைதி விடுதலை!



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்து வழங்கிய குற்றச்சாட்டில் கைதான அரசியல் கைதியொருவர் 12 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விக்கினேஸ்வரா கல்லூரி வீதி கரவெட்டி மேற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தப்பு ராஜசேகரே கொழும்பு நீதிவான் நீதிமன்றின் நீதிபதி சந்திமல் லியனகேயால் நிரபராதி எனத் தெரிவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கின் எதிரியான கந்தப்பு ராஜசேகர் சார்பில் சட்டத்தரணி தர்மஜாவின் ஆலோசனையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் ஆலோசனையின் படி இறுதி யுத்தகால பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காகக் கொழும்பில் நிதி சேகரித்து வழங்கிய குற்றச்சாட்டில் கடந்த 2010.10.19 அன்று கந்தப்பு ராஜசேகர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணிநேரமும் மக்கள் உரிமையை மீறுகின்றனர் நாட்டின் ஆட்சியாளர்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் போட்டுத் தாக்கு



அரசாங்கம் மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். கருத்து வெளியிடும் சுதந்திரம், அரசியல் செய்யும் உரிமை உள்ளிட்ட உரிமைகளை அரசாங்கம் மீறும் வகையில் செயற்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். சம்மாந்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்குபற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இதன்படி தற்பொழுது நாட்டின் ஆட்சியாளர்கள் 24 மணித்தியாலங்களும் மக்களின் உரிமைகளை மீறி வருகின்றனர். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவற்றிலிருந்து மிகை வரி அறவீடு செய்யும் தீர்மானத்தை அரசாங்கம் வாபஸ்பெற்றுக்கொண்டமைக்கான பிரதான ஏது, ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டமாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.02.2022இல் வெளியிடப்பெற்றது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 283

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**717.சுதந்திர ஜனநாயக தமிழீழக் குடியரசை வளர்த்துக் கொண்டிருக்க முடியுமா?**

ஒன்றை செய்வதற்கு முன்னால் யோசிக்க வேண்டும். யோசித்துச் செய்த முடிவுகளில் நம்பிக்கை வைக்க வேண்டும் இராமன் தன்னைத் தேடிவருவார் என்ற நம்பிக்கையில்தான் சீதை வாழ்ந்திருந்தாள்.

இராமன் மீது நம்பிக்கை வைத்தே விபீஷணன் அவரோடு சேர்ந்தான்.

இராவணன் மீது நம்பிக்கை வைத்த தால்கும்பகர்ணன் அவனோடு இருந்தான்.

அங்கே போனால் அது கிடைக்காது, இங்கே போனால் இது கிடைக்காது என்று அவநம்பிக்கைகளில் - தங்களது அங்கலாய்ப்பில் - தமிழ் மக்கள் எங்கேயும் போகாமல், எதிலும் முன்னேறாமல், இருந்த இடத்திலிருந்தே இன்னும் அப்படிப் போவதா, இப்படிப் போவதா என்று சுழன்று கொண்டிருக்கின்றார்கள்.

இறைமையை ஒட்டி இராமன் நல்லவனா, இராணவனன் நல்லவனா என்பதில்லை, சீதைக்கு விடுதலையும் விடிவும் கிடைக்குமா என்பதுதான் விடயன். அதனைத் தமிழ் மக்களும் புத்திஜீவிகளும் சிந்தித்து இந்திய - ஸ்ரீலங்கா உறவுகள் இருந்த சீரழிவில் ஆதாயம் தேடியிருக்க வேண்டும். தமிழ் மக்களின் தூரதரிசனமற்ற பார்வையாலும், அவர்களது கூட்டுறவற்ற குணங்களாலும், விடுதலைப் புலிகளின் ஆளுமைகளாலும், அவர்கள் சூட்டிய துரோகிப் பட்டங்களினாலும் வரதராஜப் பெருமா



ளுக்கு அதனை வளர்த்துக் கொள்ளக் கூடிய அரசியல் பலம் இருக்கவில்லை. சாதிக்கக் கூடிய வழிவகைகள் உருவாகவில்லை.

பிரேமதாஸாவுடன் அவர்கள் பேச அழைக்கப்பட்ட போது ஒருதலைப் பட்சமான சுதந்திர தீர்மானப் பிரகடனத்தை நிறைவேற்றியதற்கு மன்னிப்புக் கோரித்தான் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்கள் என்ற செய்திகள் உண்டு. இவற்றால் சென்னையில் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் முக்கியமானவர்களோடு 19 ஜூன் 1990 இல் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த போது அவரும் மேலும் 12 பேரும் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டனர். வரதராஜப் பெருமாளையும் அவர்கள் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்தனர்.

அதனால் வரதராஜப்பெருமாளும் பொது வெளியில் அரசியல் செய்ய முடியாது, பாதுகாப்புக்கள் இருந்தாலும் தலைமறைவு வாழ்வையே நடத்தி விரக்தியிலிருந்தார். பின் பிரேமதாஸா விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டு சந்திரிகா அரசு வந்த காலங்களில் ஒரு புரிந்துணர்வு அடிப்படையிலும் ஒப்பந்தத்திலும் வரதராஜபெருமாள் இந்திய பாதுகாப்பில் இருந்து, ஸ்ரீலங்காவின் பாதுகாப்புக்கு அவர்களின் இறைமைக்கு உட்பட்டவராகக் கையளிக்கப்பட்டார்.

தமிழ் மக்களின் சுதந்திர தாகத்தில் ஓர் அத்தியாயம் இப்படி அவர்களது அரசியலால் முடிந்தது.

**718.பத்மநாபாவும் தோழர்களும் ஏன் கொல்லப்பட்டார்கள்?**

அவர்கள் துரோகிகள், அழிக்கப்பட வேண்டும் என்பதே வெளிப்படையாக கூறப்பட்டது. அதைச் செய்தமைக்கான உள்ளக் கிடக்கைகளை அறிவது சிரமம். அனுமானங்களில் அவர்கள் வரதராஜப் பெருமாளின் ஈ.பி.ஆர்.எல்.எவ். நிறைவேற்றிய சுதந்திர பிரகடன தீர்மானம் தங்களது லட்சியத்திற்கு சவாலாக இருக்கும் என விளங்கினார்கள். அதேசமயம் இந்திய அனுசரணையில் அவர்கள் மீண்டும் மாகாணசபையில் இடம்பிடிக்கலாம் அல்லது அதனைக் கலைப்பதற்குக் குந்தகமாக இருந்து, இருக்கின்ற மாகாண சபையில் விடுதலைப் புலிகளைப் பங்குகொள்ள வைக்கலாம் என்ற கருத்தாக்கங்கள் இருந்தன.

வி.பி.சிங் ஆட்சிக்கு வந்து, அவர்களுடன் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு மத்தியில் நல்ல உறவு இருந்ததால் கருணாநிதி விடுதலைப் புலிகளுடன் வலுவான உறவுகள் ஏற்படுத்தி, இந்தியப்படைகள் திரும்பிய போது அவர்களை வரவேற்கத் துறைமுகத்திற்குப் போகாது, கப்பலில் அவர்களுடன் வந்த தமிழ் மக்கள் தமிழ் நாட்டில் இறங்குவதற்குத் தடையும் விதித்தார்.


விடுதலைப் புலிகளும் இந்த உறவுகளைப் பாவித்து தங்களது நடமாட்டங்களைத் தீவிரப்படுத்தி கருணாநிதியின் ஆதரவோடு மத்தியில் தங்களுக்கு ஆதரவான தீர்மானங்களை ஆக்கிக் கொள்ளலாம் எனவும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் பத்மநாபாவும் அவரது சகாக்கள் 10 பேரும் சென்னையில் அப்படிக் கொடூரமாக கொலை செய்யப்பட்டமைக்கு கருணாநிதியின் அசிரத்தையும் அவருக்கு விடுதலைப் புலிகளுடன் இருந்த தொடர்பும்தான் காரணம் எனவும், விடுதலைப் புலிகள் தங்களது நடவடிக்கைகளைப் பலப்படுத்தி தமிழகத்துக்கே வன்முறைக் கலாச்சாரத்தை எடுத்து வருகிறார்கள் எனவும் அ.தி.மு.கவின் ஜெயலலிதா எடுத்த போராட்டம், கடைசியில் கருணாநிதியின் அரசாங்கம் கலைக்கப்பட்டு தேர்தலில் ஜெயலலிதா பதவிக்கு வந்தார்.

இதற்கு முன்னர் இந்தியப் படைகளுடன் விடுதலைப் புலிகள் போரில் ஈடுபட்டிருந்த சமயம் ராஜீவ் காந்தி 15 மார்ச் 1989 கருணாநிதியையும் முரசொலி மாறனையும் புதுடெல்லிக்கு அழைத்து இரண்டு,மூன்று நாள்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி வெளியுறவுத்துறை அமைச்சர்நட்வர் சிங்கும்பின் இணைந்து தகவல் பெற்று, அவர்கள் இருவரையும் ஸ்ரீலங்கா சென்று, சந்திப்புகள் ஏற்படுத்தி, விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அதிக பட்சகோரிக்கை எதுவென்று அறிந்து வரும்படியும், அவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதிலிருந்து தான் பின் வாங்கமாட்டார் என்று உறுதியளித்திருந்தமையுடன் பயணங்களுக்கும் சந்திப்புக்களுக்குமான ஏற்பாடுகளைத் தான் ஏற்படுத்துவார் எனவும் கூறியிருந்தார்.

ஆனால் அந்த இளம் தலைவர் ராஜீவ் காந்தி தமிழக மண்ணிலேயே கொலையுண்டமை என்பது விளங்கிக் கொள்ள முடியாத சோகச் சம்பவமாகியது. அந்தச் சம்பவம் தமிழ் மக்களிடையே ஈழத் தமிழ் மக்கள் பெற்றிருந்த ஆதரவை அவர்களது போராட்டத்தீயில் தண்ணீர் விட்டு அணைத்தது போல் முடித்துவிட்டது.

பின் அ.தி.மு.க ஆட்சியில் 16 ஏப்பிரல் 2002 இல் தமிழகச் சட்ட பேரவையில் ஜெயலலிதா, இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், இலங்கை அரசின் அனுமதியைப்பெற்று, இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறைப்பிடித்துக் கொண்டு வர வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றினார்.



விளைந்த நிலைமைகளை நெருடிப்பார்க்கும் போது இந்த இனவிடுதலைப் போராட்டத்திலும் இனப்படுகொலையிலும் முன்னர் கூறியதுபோல் பலர் குளிர்காய்ந்து தங்களுக்கு ஏற்றவாறு காய்கள் நகர்த்தினார்கள். பிசைந்தார்கள். அவற்றுக்குத் துணைபோன தமிழ் தலைமைகளே திட்டமிட்டு தங்கள் பாதைகளைத் தொலைத்துவிட்ட காரியங்களாக இந்தப் போர்களின் சரித்திரம் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

(வளரும்)



தினமணி

சென்னை ஈபிஆர்எல்எப் அலுவலகத்தில் 'ஈழப் புலிகள்' திடீர் தாக்குதல்

பத்மநாப உள்பட 15 பேர் சுட்டுக் கொலை